## சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி

## S.C. No. 250/2015

**20.02.2025**

## P.W.1- ஆனந்தன்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

சம்பவ காலத்தில் அ.சா.2 தனியாகத்தான் வசித்து வந்தார் என்றால் சரிதான். சம்பவத்திற்கு காரணமான மாயி இடத்தை வாங்குவதற்கு அ.சா.2ற்கு சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. கூட்டாக வாங்கியது. போலீசார் விசாரணையின் போது மாயிடம் வாங்கிய கிரையப்பத்திரத்தை காட்டினோம். மேற்படி கிரையப்பத்திரம் யார் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்தது என்றால் எனது பெயரில் மட்டும் பதிவு செய்யப்பட்டது. அ.சா.2ன் வீடு ஏ.ஆண்டிப்பட்டியிலிருந்து தெற்கே கொடிக்குளத்திற்கு செல்லும் சாலையில் உள்ளது என்றால் சரிதான். சம்பவ ரோட்டிலிருந்து சுமார் 500 மீட்டர் தூரத்தில் அ.சா.2ன் வீடு உள்ளது என்றால் சரிதான். அ.சா.2ன் வீட்டிற்கு எதிரே ராஜேந்திரன் என்பவருக்கு நிலமும், கிணறும் இருக்கிறது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு முன்பு தென்வடலாக ஏ.ஆண்டிப்பட்டி ரோடு செல்கிறது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு வடக்கே சிஎஸ்ஐ காலனி நடுவீதி கிழமேலாக செல்கிறது என்றால் சரிதான். அதற்கு வடக்கே சிஎஸ்ஐ 1வது வீதி செல்கிறது என்றால் சரிதான். மேற்படி 1வது வீதியில் தான் 1 முதல் 4 எதிரிகள் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். அவர்களது நிலம், தோட்டங்கள் எங்கள் வீட்டின் தெற்கேயுள்ளது என்றால் சரிதான். மேற்படி சிஎஸ்ஐ காலனி தாழ்த்தப்பட்ட மக்களுக்காக அரசால் வழங்கப்பட்ட இடமாகும். சிஎஸ்ஐ பண்ணை இருந்ததால் சிஎஸ்ஐ காலனி என அழைக்கப்படுகிறது. சிஎஸ்ஐ காலனி நடுவீதிற்கும், ரோட்டிற்கும் இடையே மாயி என்பவருக்கு சொந்தமான பட்டா நிலம் இருந்தது என்றால் சரிதான். இவ்வழக்கில் கிரையம் பெற்றதாக சொல்லப்படும் இடம் மேற்படி இடம் என்றால் சரிதான். மேற்படி இடத்தில் பள்ளத்தை மெத்தி மேடாக்கி கல் ஊன்றி முள்வேலி போட்டேன் என்றால் சரிதான். அதனால் மேற்படி காலனி மக்கள் கால்வாய் ஆக்கிரமிப்பு செய்யப்படுகிறது என்று மனு கொடுத்தார்கள் என்றால் ஊர்மக்கள்

கொடுக்கவில்லை, எதிரி ஒச்சாத்தேவா் தான் இடைஞ்சல் செய்தார். வாய்கால் தண்ணீா் போகும் இடம், அதை பயன்படுத்தக்ககூடாது என்று பிரச்சினை வந்தது என்றால் சரிதான். இதுசம்மந்தமாக வைதேகி என்பவா் டிஎஸ்பி யிடம் புகார் கொடுத்து, விசாரணை நடைபெற்றது என்றால் சரிதான். மேற்படி காலனி மக்களால் என் மீது புகார் கொடுக்கப்பட்டு, பிசிஆா் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான், 1வது எதிரியின் தூண்டுதலின் பேரில் புகார் கொடுக்கப்பட்டது. அந்த வழக்கில் 1வது எதிரி சாட்சியாக உள்ளார். எங்கள் வீட்டிற்கு எதிரே கிழக்கு பக்கத்தில் பால்வாடி பள்ளி இடிந்து நிலையில் உள்ளதா என்றால் இடிந்த கட்டிடம் உள்ளது. அதற்கு வடக்கே ராஜேந்திரன் நிலம் என்றால் சரியல்ல. கிழக்கே தான் உள்ளது. கிழக்கே ராஜேந்திரன் நிலத்திற்கு அருகில் கொடிக்குளம் கண்மாய் உள்ளது என்றால் சரிதான். அந்த கண்மாயிற்கு அடுத்து நாங்கள் விவசாயம் செய்யக்கூடிய நிலம் உள்ளது என்றால் சரிதான். அங்கு கிணறு, மோட்டார் பம்பு செட் உள்ளதா என்றால் உள்ளது. ஸ்டீபன் குடியிருக்கும் நிலத்திற்கு கிழக்கேயுள்ள ராஜேந்திரன் நிலத்திலும் கிணறு, மோட்டார் செட் ஆகியவை உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடமான பால்பாண்டி, இந்திரா ஆகியோரின் இடத்தில் தான் எங்களுக்கு சொந்தமான டிராக்டர், தொழி அடிக்கும் கேஜ் வீல் இருக்கும் என்றால் சரிதான். மூக்கன் தோட்டம் என்று அழைப்பார்கள். நான் தோட்டத்திற்கு காலையில் சென்றுவிட்டு மாலை எத்தனை மணிக்கு வீட்டிற்கு வருவேன் என்றால் 3.00, 3.30 மணிக்கு சில நாட்களிலும், சில நாட்களில் இரவு 9, 10 மணி ஆகலாம். சம்பவ தேதியில் மதியம் 3.30, 3.45 மணிக்கு வந்தேன். சம்பவ நாளில் குளிப்பதற்காக தான் அங்கு சென்றோம் என்றால் சரிதான், வேலை இல்லையென்றால் நான் வண்டி நிறுத்தும் இடத்தில் தான் இருப்பேன். அங்கிருந்து எனது வீடு அழைக்கும் தூரத்தில் இருக்கிறது என்றால் சரிதான். மேற்படி வண்டி நிறுத்தும் இடத்திலிருந்து சிஎஸ்ஐ காலனி தெரியாது என்றால் சரியல்ல. குளிக்கும்போது துண்டு, சோப் எடுத்து சென்றேனா என்றால் துண்டு வைத்திருந்தேன். சோப் எடுத்து போகும் பழக்கம் இல்லை. மாற்றுத்துணியும் எடுத்து செல்லவில்லை. அப்போது அங்கு வேறு யாரும் குளித்து கொண்டிருந்தார்களா என்றால் யாரும் குளித்து கொண்டிருக்கவில்லை. வழக்கில் எனக்கு தான் முதன்முதலில் காயம் ஏற்பட்டது என்றால் சரவணன் என்பவா் இதோடு செத்து தொலைந்து போடா என சொல்லி காலில் வெட்டியதால் இடது

காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. காலில் வெட்டுப்பட்ட உடனே நான் கிழே விழுந்துவிட்டேன் என்றால் சரிதான். அன்றும் வேட்டிதான் உடுத்திருந்தேன் என்றால் சரியல்ல, கைலி உடுத்தியிருந்தேன். ரத்தம் கைலியில் பட்டது என்றால் சரிதான். மேலும் ரத்தம் தரையில் சிந்தியது என்றால் சரிதான். நான் கிழே விழுந்துவுடன் கண் இமைக்கும் நேரத்தில் மற்றவர்களுக்கு காயம் ஏற்பட்டதா என்றால் அவ்வாறு சொல்லமுடியாது, நான் கிழே விழுந்து கிடந்தபோது அனைவருக்கும் காயம் ஏற்பட்டது. கடைசியாக காயம்பட்டவர்களை வண்டியில் அழைத்து சென்றார்கள் என்றால் சரிதான். ஆட்கள் வந்து எதிரிகள் ஓடி செல்லும் வரை நாங்கள் அனைவரும் அதே இடத்தில் கிடந்தோம் என்றால் சரிதான். ஆட்கள் வந்து தான் கிழே விழுந்து கிடந்த எல்லோரையும் வண்டியில் ஏற்றினார்கள் என்றால் சரிதான். மற்றவர்கள் விழுந்து கிடந்த இடத்திலும் ரத்தக்கறை கிடந்தது என்றால் சரிதான். நானும், எனது மகன்களும், எனது சகோதரரும் செருப்பு அணியும் பழக்கம் உண்டா என்றால் நான் மட்டும் போடுவேன், வேலை செய்யும் இடம் என்பதால் மற்றவர்கள் போடவில்லை. தோளில் கிடந்த துண்டு அதே இடத்தில் கிடந்தது என்றால் எனக்கு வெட்டுக்காயம் பட்டவுடன் எனக்கு துண்டு எங்கு விழுந்தது என்று தெரியவில்லை. அதன்பின்பு அந்த துண்டை எப்போதாவது பார்த்தேனா என்றால் நான் மருத்துவமனைக்கு சென்றதால் பார்க்கவில்லை. சம்பவ இடத்திலிருந்து காயம்பட்ட எங்களை சுமோ காரில் அழைத்து சென்றார்கள். நாங்கள் உத்தப்பநாயக்கனூர் காவல் நிலையத்திற்கு 5.00, 5.15 மணிக்குள் சென்றுவிட்டோம். போலீசார் எனக்கு ஏற்பட்ட காயத்தை பார்த்தார்களா என்றால் வண்டிக்குள் எட்டி பார்த்தார்கள், உடனே மருத்துவமனைக்கு செல்லுமாறு கூறினார்கள், மருத்துவமனைக்கு வந்து விசாரிப்பதாக சொன்னார்கள். நான் முதல் விசாரணையில் காவல் நிலையம் சென்றதாகவும், அங்கு மருத்துவ நமுனா கொடுத்த சங்கதி உண்மையை என்றால் சரிதான், ஆனால் மருத்துவ நமுனா கொடுக்காமல் தான் மருத்துவமனைக்கு செல்லுமாறு சொன்னார்கள். மேற்படி சுமோ கார் எனக்கு சொந்தமானது என்றால் எனக்கு சொந்தமானதல்ல, யாருக்கு சொந்தம் என்றால் எனக்கு தெரியாது. அந்த சுமோர் காரில் யார் என்னை அழைத்து சென்றார்கள் என்றால் தெரியாது. காவல் நிலையத்திலிருந்து நேரடியாக உசிலம்பட்டி, அரசு மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் சரிதான். எபிநேசர் எனக்கு நண்பர் ஆவார். காவல் நிலையத்திற்கோ,

மருத்துவமனைக்கோ எபிநேசர் என்னுடன் வந்தாரா என்றால் மருத்துவமனைக்கு வந்தார். மருத்துவர் என்னிடம் எப்படி காயம் ஏற்பட்டது என கேட்டார்களா என்றால் கேட்டார், சண்டையில் காயம்பட்டதாக சொன்னோம். உடனே காயம் பலமாக இருப்பதால் மதுரை பெரிய ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லவும், உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்க முடியாது என கூறி முதலுதவி செய்து அனுப்பி வைத்தார். மதுரை அரசு மருத்துவமனையில் காயம் எவ்வாறு ஏற்பட்டது என என்னிடம் கேட்டாரா என்றால் கேட்டார். மதுரை அரசு மருத்துவமனையில் எனக்கு எத்தனை நாட்கள் கழித்து காயத்திற்கு எக்ஸ்-ரே எடுத்தார்கள் என்றால் மறுநாளே எடுத்தார்கள். எக்ஸ்ரே எடுக்கும்போது என்ன நேரம் இருக்கும் என்றால் ஞாபகமில்லை. நான் காவல் நிலையத்திற்கு சென்றபோது வண்டிக்குள் இருந்தபோது போலீசார் எனது ரத்தம் பட்ட உடைகளை பார்த்தார்களா என்றால் அவர்கள் பார்த்தார்களா, இல்லையா என எனக்கு தெரியாது. போலீசாரிடம் நான் காட்டவில்லை, அவர்கள் பார்த்தார்கள். சா.பொ.ஆ.1, 2 அருவாள், கம்பி ஆகியவைகளை சம்பவத்திற்கு பின்பு நீதிமன்றத்தில் பார்க்கிறேன் என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரித்தபோதும், புகார் கொடுத்தபோதும் சா.பொ.ஆ.1, 2 பொருத்து தனிப்பட்ட அடையாளங்களை சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு சம்பவம் நடந்தவுடன் விவரம் தெரிந்தவுடன் வீட்டார்கள் வந்தார்களா என்றால் எல்லோரும் அங்கு தான் இருந்தோம். என் மனைவி வந்தார், அவரும் தாக்கப்பட்டார். நான் போலீசார் கொடுத்த புகாரிலும், வாக்குமூலத்திலும் எனது மனைவி தாக்கப்பட்ட விவரத்தை சொல்லவில்லை. எனது மனைவி எங்கு வைத்தியம் பார்த்தார் என ஆவணங்களை போலீசாரிடம் கொடுக்கவில்லை. எனது மனைவியை போலீசார் விசாரித்தார்களா என்றால் தெரியாது. அருவாளில் பல வகைகள் உண்டு என்றால் சரிதான், கம்பியிலும் பல வகைகள் உண்டு என்றால் சரிதான். சா.பொ.ஆ.1, 2 இரும்பு கடைகளில் கிடைக்கும் என்றால் எனக்கு தெரியாது. போலீசார் விசாரணையின்போது நான் வாங்கிய இடத்தில் காலனியில் உள்ள மக்களுக்கு பாத்தியப்பட்டது என கூறி அவர்களை ஏவிவிட்டு பொய்யாக பிசிஆர் வழக்கு பதிவு செய்யப்பட்டு, அந்த வழக்கில் விடுதலையாகிவிட்டேன். இதனால் எனக்கும், 1ம் எதிரிக்கும் பிரச்சினை இருந்து வந்தது என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். முதல் விசாரணையின் சொன்னது போன்று தான் போலீசார் விசாரணையிலும்

சொல்லியுள்ளேன். நான் சொன்னது போன்று, சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எதிரிகளால் நாங்கள் யாரும் தாக்கப்படவில்லை, அதனால் வழக்கில் சொன்னது போன்று காயங்கள் ஏற்படவில்லை என்றாலும், பாசன வாய்காலை அடைத்தது சம்மந்தமாக காலனிக்காரர்களுக்கு 1ம் எதிரி மற்றும் குடும்பத்தார் துணையாக செயல்பட்டதால் நான் தான் அவர்களை அடித்து காயப்படுத்தினேன் என்றாலும் அந்த வழக்கிலிருந்து தப்பிக்க வேண்டும் என்பதற்காக எனக்கு எப்படியோ, எதனாலோ ஏற்பட்ட காயங்களை பயன்படுத்தி இந்த வழக்கில் எதிரிகள் மீது பொய்யாக குற்ற சாட்டு கூறுகிறேன் என்றால் சரியல்ல.

**6ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

முதல் விசாரணையில் மாயிடம் வாங்கிய சொத்து எந்த தேதியில், யார் பெயரில் கிரையம் முடிக்கப்பட்டது என்றால் ஆனந்தன் பெயரில் கிரையம் முடிக்கப்பட்டது, தேதி ஞாபகமில்லை. இதற்கு முன்பு 1ம் எதிரியோ, அவர்களது குடும்பத்தார்களோ உத்தப்பநாயக்கனூர் காவல் நிலையத்தில் என் மீது புகார் கொடுத்தார்களா என்றால் அவர்கள் கொடுக்கவில்லை, நாங்கள் தான் கொடுத்தோம். அவ்வாறு சம்பவத்திற்கு எந்த தேதியில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியாக ஞாபகமில்லை, ஜனவரி மாதம் 2014ல் கொடுத்துள்ளேன். என்ன புகார் என்றால் நில பிரச்சினை சம்மந்தமான புகார் ஆகும். மேற்படி புகாரை நான், ஒச்சாத்தேவர் வகையறா மீது கொடுத்தேன். அ.சா.4 ஆசிர்வாதம் எனது மகன். அவர் சட்ட பட்டப்படிப்பை முடித்து விட்டாரா என்றால் ஒரு வருடத்திற்கு முன்பு முடித்தார். நான் புகார் கொடுக்கும்போது அ.சா.4 என்னுடன் வந்தாரா என்றால் வரவில்லை. சொத்து சம்மந்தமாக கொடுத்த புகார் என்ன ஆனது என்றால் கூப்பிட்டு விசாரித்தார்கள், என்னுடைய பட்டா இடம் என்பதால் என் அனுபவத்தை மற்ற நபர்கள் இடையூறு செய்யக் கூடாது என சொல்லி அனுப்பி விட்டார்கள். எங்கள் ஊரைச் சேர்ந்த வைதேகி என்பவர் என் மீது தொடர்ச்சியாக புகார் கொடுத்தாரா என்றால் தொடர்ச்சியாக என சொல்லமுடியாது, ஒருமுறை புகார் கொடுத்தார். மேற்படி புகார் மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட காவல் காண்காணிப்பாளரிடம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி புகாரின் சாரம்சம் நான் கிரையம் வாங்கிய இடம் ஓடைப்பகுதி, அதை அடைத்ததால் பிரச்சினை வந்தது என்றால் சரியல்ல, நான் வாங்கிய இடம் தரிசு இடமாகும். மேற்படி சொத்து புகார் சம்மந்தமாக என்னை உத்தப்பநாயக்கனூர் காவல் நிலையத்திலிருந்து போலீசார் விசாரித்தார்கள்.

உசிலம்பட்டி காவல் துணை கண்காணிப்பாளர் இந்த புகார் சம்மந்தமாக விசாரித்தாரா என்றால் விசாரித்தார். மேற்படி விசாரணையில் காவல் துணை கண்காணிப்பாளர் சம்மந்தப்பட்ட இடம் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்றும், அவ்வாறு கொண்டு வரவில்லையென்றால் சட்டம், ஒழுங்கு பிரச்சினை ஏற்படும் என்றும், மேற்படி நிலத்தை தனியாரிடம் பெற்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர ஆவணம் செய்யுமாறு மாவட்ட ஆட்சித்தலைவருக்கு 23.09.2013 அன்று அனுப்பினார் என்றால் அனுப்பியுள்ளார். பொதுமக்களுக்கு பயன்பாட்டிற்கு மேற்படி இடத்தை கொடுக்காமல் ஊர் மக்களுக்கு எதிராக நான் செயல்பட்டேன் என்றால் சரியல்ல. ஊர் மக்கள் யாரும் அந்த இடத்தை என்னிடம் கேட்கவில்லை. நான், மாயிடம் கிரையம் வாங்குவதற்கு முன்பு 1வது எதிரியோ, அவரது குடும்பத்தாரோ முன்பணம் கொடுத்து அந்த இடத்தை கிரைய ஒப்பந்தம் எதுவும் ஏற்படுத்தினார்களா என்றால் அவ்வாறு இல்லை. நான், மாயிடம் கிரையம் பெற்ற பின்பு அந்த இடத்திற்குள் 1ம் எதிரியோ, அவரது குடும்பத்தாரோ அத்துமீறி நுழைந்து அந்த இடத்தை புலக்கத்திற்கு எடுத்தார்களா என்றால் என்னை புலங்க அனுமதிக்கவில்லை. அப்போது தான் சொத்து பிரச்சினை சம்மந்தமாக முதன் முதலில் புகார் கொடுத்தேன். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் விசாரிக்கும்போது அந்த புகாரின் நகலை கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. 1ம் எதிரியோ, அவரது குடும்பத்தாரோ அத்துமீறி எனது இடத்திற்குள் நுழையவில்லை என்றாலும், வழக்கிற்காக உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதேபோல் 1ம் எதிரியோ, அவரது குடும்பத்தாரோ மாயிடமிருந்து எந்த சூழ்நிலையிலும் மேற்படி இடத்தை வாங்குவதற்கு முயற்சிக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு வழக்கு மூலம் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக மேற்படி சொத்தை 1ம் எதிரியின் குடும்பத்தார் வாங்க முயற்சித்தார்கள் என்பதால், எனக்கும், 1ம் எதிரிக்கும் பிரச்சினை இருந்ததாகவும், வழக்குமூலம் உற்பத்தி செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.3 என மகன் பிரசாத்தின் முழுபெயர் புருசோத்தமன் (எ) பிரசாத் என்றால் சரிதான். மேற்படி பிசிஆர் வழக்கில் 1ம் எதிரி ஒரு சாட்சி என்றால் சரிதான். மேற்படி வழக்கின் புகார்தாரர் எங்கள் ஊரை சேர்ந்த அண்ணாமலை என்றால் சரிதான். வைதேகி, அண்ணாமலை இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு மாவட்ட ஆட்சித்தலைவரிடம் மாயிடம் வாங்கிய இடம்

சம்மந்தமாக புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி வைதேகி மற்றும் அண்ணாமலை ஆகிய இருவரும் தலித் சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். 1ம் எதிரியோ, அவரது கும்பத்தினரோ தலித் மக்களை எந்த வகையிலும், தூண்டி விடவில்லை என்றாலும், மேற்படி வைதேகி மற்றும் அண்ணாமலை ஆகியோர்கள் தான் நான் வாங்கிய இடத்தை பொது பயன்பாட்டிற்கு கொண்டு வர முயற்சித்தார்கள் என்றாலும் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதியான பாப்பு மற்றும் ஒச்சம்மாள் கையில் வைத்திருந்து கம்பால் எனது மகன் பிரசாத்தை மாறி மாறி உடம்பில் அடித்தார்கள், இதனால் வீக்க காயம் ஏற்பட்டது என்ற விவரத்தை எனது புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சங்கதிகளை புகாரிலோ, 161 (3) வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். 14.04.2014ம் தேதிய சம்பவத்திற்கு இரு தரப்பிலும் புகார் கொடுக்கப்பட்டு, வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் எதிரிகள் கொடுத்த புகார் பொய் புகார் ஆகும். மேற்படி 1ம் எதிரி கொடுத்த புகார் சம்மந்தமாக எங்கள் 6 பேர் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டு, உசிலமபட்டி, நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2ல் சி.சி.127-2015 என வழக்கு விசாரணையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். எனக்கும், எனது மனைவி, பிள்ளைகளுக்கு மொத்தம் எவ்வளவு சொத்துக்கள் உள்ளது என்றால் சுமார் ஒன்றரை ஏக்கர் சொத்துக்கள் உள்ளது. மெயின் ரோட்டிற்கு முன்பு உள்ள எங்களது வீட்டிற்கு முன்புதான் செட் போட்டு டிராக்டர் மற்றும் விவசாய தளவாட பொருட்களை போட்டு வைத்துள்ளோம் என்றால் சரிதான். அந்த மெயின் ரோட்டிற்கு அருகே உள்ள செட்டில் சுமோ கார் உள்ளது என்றால் சரிதான். சிசிடிவி கேமரா தற்போது 6 மாதமாக உள்ளது. புகாரில் நான் தேதி போடவில்லை என்றால் சரிதான். அறிவேன் சாட்சி எபிநேசரும் தேதி போடவில்லை என்றால் சரிதான். புகாரில் உள்ள அடித்தல், திருத்தலில் மேற்கையொப்பம் எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். புகார் யாரால், எப்போது எழுதப்பட்டது என்ற குறிப்பு உள்ளதா என்றால் புகார் நான் கொடுக்கவில்லை, புகார் வாக்குமூலம் தான் நான் கொடுத்தேன். ஆகையால் அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் அதை எனக்கு படித்து காண்பித்தார்கள். இந்த புகார் யார் எழுதினார்கள் என்று குறிப்பு இல்லையென்றால் நான் படித்து பார்க்கவில்லை. படிக்க கேட்டுக்கொண்டேன். மூக்கனின் கிணற்றின் சுற்றளவு பற்றி தெரியாது.

கிணற்றை சுற்றி கல் அடிக்கி வைக்கப்பட்டதா என்றால் கிணறு கட்ட வைக்கப்பட்டிருந்தது. காலில் காயம்பட்டவுடன் துண்டை வைத்து கட்டினேனா என்றால் துண்டு எங்கு விழுந்தது என்று ஞாபகமில்லை. காலை துணி வைத்து கட்டினோனா என்றால் கட்டவில்லை. ரத்தக்கறை படிந்த துணியை காவல்துறையினரிடம் கொடுத்தேனா என்றால் நான் தான் ரொம்ப நாட்களாக வைத்திருந்தேன். சம்பவ இடத்தில் கிழே கிடந்ததாக சொல்லப்படும் அருவாள், கம்பில் ரத்தக்கறை இருந்ததா என்றால் நான் பார்க்கவில்லை. அ.சா.3 என்பவர் கம்பியால் 3ம் எதிரியை இடதுகை பெருவிரலில் அடித்து எலும்பு முறிவு ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. அ.சா.4 3ம் எதிரியின் இடது பக்க தோள்பட்டையின் பின்புறம் கடித்து ரத்தக்காயத்தை ஏற்படுத்தியும், கிழே விழுந்த 3ம் எதிரியை அ.சா.4 ஆண்குறியை பிடித்து கசக்கியதாக சொல்லியிருந்தால் அது பொய்யாகும். 1ம் எதிரியை அ.சா.1 கம்பியால் அடித்ததில வலது பக்க நெற்றியுலும், இடது பக்க ஆள்காட்டி விரலிலும் ரத்தக்காயம் ஏற்படுத்தினேன் என்றால் அது பொய். பாண்டி என்பவர் எனதுடன் பிறந்த தம்பி என்றால் சரிதான். மேற்படி பாண்டி, ஒச்சாத்தேவரை கம்பியால் வலது தோள்பட்டையில் அடித்து ஊமைக்காயத்தை ஏற்படுத்தினார் என்றும், அவரது ஆண்குறியை பிடித்து கசக்கினார் என்றால் அது பொய்யாகும். அ.சா.1 முதல் 4 ஆகியோர்கள் சேர்ந்து தான் 1 முதல் 6 எதிரிகளை அடித்து காயப்படுத்தி ஏற்படுத்தினோம் என்று சொன்னால் சரியல்ல. ஒச்சாத்தேவரின் மனைவி பாப்பு என்பவரை நானும், எனது மகன் அ.சா.3, 4 ஆகியோரும் சேலையை பிடித்து இழுத்து மானபங்கம் செய்தோம் என்றால் சரியல்ல. எதிரிகளை நாங்கள தான் அடித்து, துன்புறுத்தி சேலையை பிடித்து இழுத்து வழக்கு நிலுவையில் இருக்கிறது என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

ஓம் / **R.S.** ரஸ்கின் ராஜ்,
சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.